Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

Y.M.C.A.

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2203 ஐப்பசி 22 (07-11-1992) சனிக்கிழமை ஓசை 263

## 18,000கடற்றொழிலாளர் தொழில்செய்ய முடியாதநிலை

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் சுமார் 18,000 மீனவர்கள் தமது தொழில்களை இழந்துள்ளனர். இராணுவ நடவடிக்கைகளினால் இவர்களில் சுமார் 11,600 பேர் தமது இடங்களை விட்டு வெளியேறிக் கடல்தொழில்செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏனையவர்கள் இராணுவ நடவடிக்கையின் காரணமாக கடல்தொழில் செய்யமுடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. இடம் பெயர்ந்தவர்களுக்கு ஏனைய இடங்களில் தொழில் வாய்ப்பைக் கொடுக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இவர்களுக்கு மாற்றீடாக வேறு தொழில்வழங்க ஒரு விரிவான திட்டத்தை பொது தாபனங்களுடன் (4 ஆம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கு காடுகளில் போராட விசேட படையணி உருவாக்கம்

## தேர்ச்சிபெற்ற ராணுவத்தினர் தெரிவு

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் காடுகளில் போரிட விசேட படையணி ஒன்றை உருவாக்கவுள்ளதாக சிறிலங்காவின் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இப் படையணிக்கு ஏற்கனவே இராணுவத்தில் இருக்கும் தேர்ச்சிபெற்ற சிப்பாய்கள்சேர்த்துக் கொள்ளப் படுவதோடு அவர்களுக்கு மேலதிக பயிற்சியும் அளிக்கப்படவுள்ளதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குக் காடுகளில் விடுதலைப் புலிகள் பெருமளவில் நிலைகொண்டிருப்பதனாலும், அப்பகுதிகளில் இருந்து அடிக்கடி புலிகள் வெளியேறி காடுகளின் ஓரத்தில் உள்ள இராணுவ நிலைகளைத்தாக்குவதனாலும் இப்புதிய படை அணியை உருவாக்க இராணுவ தரப்பு முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காடுகளில் தரித்திருக்கும் புலிகளுக்கு எதிராகக் காடுகளில் போராடுவதற்குத் தயாராகும் இப் படையணிக்குக் கெரில்லா எதிர் நடவடிக்கையில் விசேட பயிற்சி வழங்கப் படும் எனவும் தெரியவருகின்றது.

இவ்விசேட படையணியினர் காடுகளில் புதிய முகாம்களை அமைத்து காட்டுப் பகுதிகளில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரியவருகின்றது

திருமலை - காங்கேசன்

## வாரம் 2 கப்பல் சேவை மூன்று வாரங்களில் ஆரம்பம்

வடபகுதி பயணத்திற்கு கப்பல் சேவை அறிமுகப்படுத்தப்பட உள்ளது, யாழ்ப்பாணம் செல்லும் பயணிகளுக்கான கப்பல் சேவை இன்னும் மூன்று வாரங்களில் ஆரம்பிக்கப்படும் என அத்தியாவசிய சேவை ஆணையாளர் பிரிவு தெரிவித்துள்ளது

திருமலையில் இருந்து வாரம் இரு தடவை இக்கப்பல் சேவை நடாத்தப்பட உள்ளதாகவும் யாழ் செல்லும் பயணிகள் 100 பேர் குறிப்பிட்டளவு பொதிகளுடன் ஒரு தடவையில் பயணம் செய்ய முடியும் எனவும் அத்தியாவசிய சேவைகள் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இக்கப்பல் பிரயாணத்திற்கு பிரயாணி ஒருவரிடம் இருந்து 200 ரூபா கட்டணமாக அறவிடப்படும்.

திருமலையில் இருந்து காங்கேசன்துறை, தீவுப்பகுதி ஆகியவற்றிற்கு இக்கப்பல் செல்லுமெனவும்

கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி சேவையை ஆரம்பிப் (4 ஆம் பக்கம் பார்க்க)

கடந்த இருமாதங்களாக

## மீனவர் குடும்பங்களுக்கு நிவாரணம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மீனவர்கள் குடும்பங்களுக்கு கடந்த இரு மாதங்களாக எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை என்று கடற்றொழிலாளர் சங்கப் பிரதி நிதி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்பு புதிய முறையில் நிவாரணம் வழங்குவதற்காக புதிய அட்டைகள் வழங்கப்பட்டதினால் மேற்படி மீனவர் குடும்பங்களிடம் இருந்த கூப்பன் முத்திரைகள் மீளப் பெறப்பட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி சேகரிப்பு

நாளை உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவினருக்கான மீட்புநிதி சேகரிப்பு காலை 9-00மணிமுதல் 10-00 மணி வரை சுன்னாகம் மயிலணி பாடசாலையிலும் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவினருக்கான மீட்பு நிதி சேகரிப்பு காலை 10-30-11 30 மணிவரை மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையிலும், சண்டிலிப்பாய் உதவி (4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கைகளின் விளைவுகள் டிசம்பரில் தெரியும்

**- சரத் முனசிங்க**

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் விளைவுகளை வரும் டிசம்பரில் எதிர்பார்க்கலாம் என கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் கேணல் சரத்முனசிங்க நேற்று முன்தினம் தெரிவித்தார்,

பாதுகாப்புப் படையினர் விடுதலைப் புலிகளை அழிக்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்படவில்லை எனவும் தேடுதல் நடவடிக்கைகளும் தாக்குதல் நடவடிக்கைகளும் தொடர்வதனால் டிசம்பர் இறுதியில் இதன் விளைவுகளை எதிர்பார்க்கலாம் எனவும் சரத் முனசிங்கா மேலும் தெரிவித்தார்

காக்காச்சி வெட்டையில் காணாமல் போனோர்

## சர்வதேச மன்னிப்புச் சபை பிரேமா கவனத்திற்கு கொண்டுவரும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காக்காச்சி வெட்டைப்பகுதியில் கைதாகி வேறு விபரம் தெரியாமலிருக்கும் 41 தமிழர்களின் நிலை குறித்தும் சர்வதேச மன்னிப்புச் சபையினர் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவருவதாக உறுதியளித்துள்ளனர்.

காணமல் போனோரின் உறவினர்களது வாக்குமூலங்களை ... யினர் மட்டுநகர் கத்தோலிக்க மண்டபத்தில் வைத்து பதிவு செய்தனர்.

இராணுவத்தினர் பெருமளவு தமிழர்களை கைது செய்த போதும் அவர்களில் காணாமல் போன 41 பேரை கைது செய்யவில்லை எனக் குறிப்பிடுகின்றனர். கைதானோரில் ஆறுபேரை மக்கள் சடலங்களாக கண்டுள்ளனர் ... களினுடையது இந் நிலையில் ஏனையோருக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் கலக்கமுறுவதாக உறவினர் தமது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து சர்வதேச மன்னிப்புச் சபையினர் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்து இதுபற்றி ஆராய அரசாங்கத்திற்கு ...

# அரச உள்ளூராட்சி ஊழியருக்கு 30 சதவீத சம்பள உயர்வு

வினர்களது வாக்குமூலங்களை சர்வதேச மன்னிப்புச் சபை

சடலங்களாக கண்டுள்ளனர் இச்சடலத்தில் இரண்டு பெண்

ஆராய அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்போவதாக உறுதியளித்தனர்.

# 30 சதவீத சம்பள உயர்வு

## ஓய்வூதியமும் 300 ரூபாவால் அதிகரிப்பு

அரசாங்க, உள்ளூராட்சி ஊழியர்களுக்கு 30 சதவீத சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஊழியர் ஒருவருக்கு மிகக் குறைந்த மாதாந்த சம்பள உயர்வு 500 ரூபாவாக இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு கட்டங்களாக இந்தச் சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது. பிரதம மந்திரியும், நிதி அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா நேற்றுப் பிற்பகல் பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட யோசனைகளைச் சமர்ப்பித்தபோது இந்த விபரங்களை அறிவித்தார்.

மாதாந்தம் 3000 ரூபாவுக்குக் குறைந்த தொகையை ஆரம்பச் சம்பளமாகப் பெறும் ஊழியர்களுக்கு அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இந்தச் சம்பள அதிகரிப்பில் 60 சதவீதம் வழங்கப்படும். எஞ்சிய 40 சதவீதம் அதே ஆண்டு ஜூலை மாதம் முதல் வழங்கப்படவிருக்கிறது. ஏனைய ஊழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பில் 50 சதவீதம் 1993 ஜனவரியிலிருந்து வழங்கப்படும். மிகுதி 1994 இல் வழங்கப்படும்.

ஓய்வூதியப் பெறும் சகலருக்கும் 1993 ஜனவரிமாதம்முதல் 300 ரூபா ஓய்வூதிய அதிகரிப்பு

( 4 ஆம் பக்கம் பார்க்க )

மட்டு. மக்கள் வங்கியில்

## நகை அடைவு வைத்தோர் மீது கம்பியால் தாக்கு

(மட்டக்களப்பு)

வடக்கு, கிழக்கு சம்பவங்களால் பாதிக்கப்பட்டு தமது அடைவு நகைகளை நீண்டகாலம் பெறமுடியாது இருந்த நகைச் சொந்தக்காரர் பலர் அடைவு நகையை மீளப்பெறுவதற்காக வங்கியின் அறிவுறுத்தலின்படி அங்கு சென்றபோது இரும்புக் கம்பிகளால் பலமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு நகரில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது மக்கள் வங்கியின் நகரக்கிளை மற்றும் அரசடிக் கிளை, ஆகியனவற்றில் அடைவு வைத்தவர்கள் அவற்றை மீளப் பெறுவதற்காக 23.10 92 இல் மட்டக்களப்பு நகரக் கிளையின் முன்றலுக்கு வரும்படி

(4 ஆம் பக்கம் பார்க்க)

காணாமல் போயுள்ள

## 33 தமிழ் இளைஞர் பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி

[கொழும்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளதாகக் கூறப்படும் சுமார் 33 தமிழ் இளைஞர்கள் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை மேற்கொள்ளப்படுமா என்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

காணாமல் போயுள்ளதாகக் கூறப்படும் 33 இளைஞர்களது பெயர் விபரங்களையும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஏறாவூர் பகுதியில்

## தமிழர் மீது தாக்குதல் கண்டித்து ஹர்த்தால்

[மட்டக்களப்பு]

ஏறாவூருக்கு அருகேயுள்ள ஐயங்கேணி கிராமத்தில் மேசன் தொழிலுக்காகச் சென்ற நான்கு தமிழர் முஸ்லிம்களின் கத்தி வெட்டிற்கு இலக்கான சம்பவத்தைக் கண்டித்து செங்கலடி, வந்தாறுமூலை, வாழைச்சேனை பகுதிகளில் நேற்று முன்தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் இப் பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. கறுப்பு வெள்ளைக் கொடிகளும் பறக்கவிடப்பட்டன.

## யுத்தத்திற்கு 18,000 மில்லியன் பாதுகாப்பு வரி தொடரும்

(கொழும்பு)

வடக்கிலும், கிழக்கிலும் நடக்கும் போருக்காக 18,000 மில்லியன் ரூபா தேவைப்படும் அதுவும் கூட போதாதென்று வரவு செலவுத் திட்ட ஆலோசனையைச் சமர்ப்பித்துப் பேசிய பிரதமரும், நிதி அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா தெரிவித்தார்.

18,000 மில்லியன் ரூபா கூடப் போதாது எனவே பாதுகாப்பு வரி தொடர்ந்து இருக்கும் என்றார் அவர்

## மட்டக்களப்பு ஆடை தயாரிப்புநிலையம் ஜேர்மனியருக்கு அரசு கைவிரிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பில் ஆடை தயாரிப்பு தொழிற்சாலை அமைக்க முன் வந்த ஜேர்மனியர் ஒருவருக்கு சிறிலங்கா அரசாங்கம் கைவிரித்து விட்டதாக நம்பகரமாகத் தெரிய வந்துள்ளது

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது; ஆடை தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றை நடத்தும் ஜேர்மனியர் ஒருவர் மூன்று மாதங்களுக்கு முன்பு மட்டக்களப்பு சென்று அங்கே ஆடை தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றை அமைக்க காணிகளை தெரிவுசெய்துள்ளார் ஆனால் மட்டக்களப்பில் தொழிற்சாலை அமைக்கப்பட்டால் பாதுகாப்பு இல்லை என்று அவரிடம் கூறிய பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழுவினர், கொத்மலையில் இத் தொழிற்சாலை அமைக்கப்பட்டால் உதவத் தயாரென கூறியுள்ளனர். இதனையடுத்து சம்பந்தப்பட்ட தொழிற்சாலை அமைக்கும் வேலைகள்ஸ்தம்பித நிலையை

(4 ஆம் பக்கம் பார்க்க)

மலையகப் பகுதி

## ஆடைத் தொழிற்சாலையில் தமிழர் புறக்கணிப்பு

மலையகப் பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் ஆடை தயாரிப்பு தொழிற்சாலைகளில் தோட்டத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு மறுக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

பதுளை எல்தணுவ தோட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆடைத் தொழிற்சாலைக்கென தொழிற்சங்கங்களால் 250 பேர் சிபாரிசு செய்யப்பட்டனர் எனவும், தொழிற்சாலை திறக்கப்படுவதற்கு முன்பு பல்வேறுவேலைகளில் ஈடுபடுத்தப்பட்ட இவர்களில், பெரும்பாலோனோர் தொழிற்சாலை திறக்கப்பட்ட பின்பு வீடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் எனவும தெரியவந்துள்ளது.

## வீரச்சாவு



### லெப். பார்த்தீபன்

யாழ் மாவட்டத்தில் 05-11-92 அன்று இடம்பெற்ற வெடிவிபத்தில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

லெப்டினன்ட் பார்த்தீபன் (விநாயகம் - ஐ ராத்துரை பிரபாகரன், புலோலி கிழக்கு,

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## துண்டு விழும் தொகை 91 ஆயிரம் மில்லியன்

(கொழும்பு)

சிறிலங்காவின் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை அடுத்த ஆண்டு 91 ஆயிரம் மில்லியன் ரூபாவாகவும், மொத்த உள்நாட்டு உற்பத்தி எட்டு சத விகிதமாகவும் இருக்கும்

இவ்வாறு ஐ. தே. க. அரசின் வரவு செலவுத் திட்ட ஆலோசனைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசிய பிரதமரும், நிதி அமைச்சருமான டி. பி. விஜேதுங்கா தெரிவித்தார்.

மக்கள் வங்கியையும், இலங்கை வங்கியையும் மாற்றியமைக்க 20.000 மில்லியன் ரூபாக்கள் தேவைப்படும் என்றும் அவர் கூறினார், இந்தப் பணத்தைப் பெற அரசு கடன் பத்திரங்களை வெளியிடும்

வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையைச் சமாளிக்க வெளிநாட்டுக் கடன் உதவியுடன் உள்நாட்டுக் கடனையும் பெறப் போவதாக அவர் சொன்னார், விற்பனை வரி மட்டங்களை நான்கிலிருந்து மூன்றாகக் குறைப்பதன்மூலம் மேலும் வருமானம் அதிகரிக்கும் என்றார் அவர்,

தேயிலை விலையில் சரிவு,

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## 'குமண' தாமதமாகசெல்லும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் ''குமண'' என்ற கப்பல் கொழும்பு செல்வது தாமதமடையும் நிலை உருவாகியுள்ளது கடல் கொந்தளிப்புக் காரணமாக இக்கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் பாதிக்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## பருவ மழை பாரில் தருவதந்தக் காடு

# வரி விளம்பரம்

## கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், ரேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள் சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்கா வாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல் பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

## பற் சிகிச்சை

பற்சிகிச்சை நிலையம் (எஸ். பி சாமி அன் கோ. கட்டிடம்) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தினசரி 12 ந ப -2 பி ப வரை. (3216)

## மாணவருக்கான கையேடு

''பரீட்சைகளுக்கான ஆயத்தமும் அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ளலும்'' உளவியல் சஞ்சிகை தனிப் பிரதி—ரூபா 12-00. தேவையானோர் பதினைந்து ரூபா முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம் முகவரி ஜே. எக்கட்டன் 193, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை. சுண்டிக்குளியில் பெற்றுக் கொள்ளலாம். (சி-5231)

## உடன் விற்பனைக்குண்டு

கறுப்பு + பிறவுண் சேவல்குஞ்சுகள் உடன்விற்பனைக்குண்டு தொகையாக பெற்றுக்கொள்ளுபவர்களுக்கு விசேட சழிவுண்டு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (3220)

Prima + Bahira Hy—Line Christombu. பிறிமா + பகிரா + கைலைன் + கிறிஸ்தப்பு ஆகிய இன பேட்டு குஞ்சுகள் + புறோயிலர் குஞ்சுகளுக்கும் தொடர்பு கொள்ளவும் மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் [3221]

## வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள் பார்வையுடன் கூடிய சைவநெறி (ஆண்டு 11) துரித மீட்டலுக்கான வினா விடை ஆக்கம்: க சந்திரசேகரம், வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும் மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-5356)

## மிருதங்கம்

மிருதங்க திருத்த வேலைகள் சுத்தமான நல்ல நாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும் கோவிந்த பிள்ளை விஜயகுமார் மிருதங்கதொழில் நிலையம் 192/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3570)

## ஆண்டு-6 அனுமதி

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு6 அனுமதி மாதிரித்தேர்வு 07-11-92 சனி மு-ப 8 00, மு ப 10-00 நடைபெறும் ஆண்டு6 அனுமதிக்கான துரித மீட்டற் பயிற்சியையும், மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம் புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (3591)

## ஆண்டு-5 புலமைப்பரிசில்

புலமைப்பரிசில் பரீட்சை 1993ற்கான மாதிரித்தேர்வு [ஆண்டு4] 07.11.92 சனி மு ப. 8-00, மு ப. 11-00 நடைபெறும். புலமைப்பரிசில் துரித மீட்டற் பயிற்சியையும் மாதிரி வினாத்தாள்களையம் பெற்றுக்கொள்ளலாம் புதிய கல்வி நிலையம். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [3592]

## எம் ஜி. ஆர் திருமணசேவை

பொருத்தமான மணமகன், மணமகள் தேடுபவர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளவும் எம் ஜி. ஆர் திருமண சேவை வே. புண்ணியமூர்த்திமீசாலை. முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. (3356)

## திருமண சேவை

பொருத்தமான மணமகன்/மணமகள் தேடுபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும் மங்களா ஏஜென்சி சொய்யாத்தோட்டம், சந்திப்பு ஞாயிறு காலை, (3586)

## ''சுவடுகள்''

இயல்வாணன் எழுதிய இந்த நாவலில்.. மௌனங்களைப் பிளந்து ஒரு வார்த்தை வெடிக்கிறது! இருளைக் கிழித்து ஒரு விடியல் பிறக்கிறது! சூரியனைத் தேடி ஒரு சுதந்திர பூ மலர்கிறது.. (3585)

## பொதுக் கூட்டம்

தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று (7-11-92) காலை 10-00 மணிக்கு யா டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அங்கத்தவர்கள், அங்கத்தவராக சேர விரும்பும் ஓய்வூதியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## திறப்புவிழாவும் ஆரம்பவிழாவும்

உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தினரின் தலைமைப் பணியகத் திறப்பு விழாவும் கைப்பணிப் பயிற்சி ஆரம்ப விழாவும் சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியில் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் நடைபெறவுள்ளது.

தலைமைப் பணியகத்தை திரு பு சுந்தரம்பிள்ளை அவர்கள் திறந்து வைப்பார். கைப்பணிப் பயிற்சியை திரு. இ. குகநேசன் அவர்களும் ஆரம்பித்து வைக்க உள்ளார்,

மேற்படி நிகழ்ச்சியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## கேள்வி கோரல்

### சுகாதாரத் திணைக்களம் - யாழ்ப்பாணம்

சுகாதார வைத்திய அதிகாரிகளின் பிரிவில் நியமிக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தற்காலிக மலசல கூடங்கள் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் அரச நிறுவனங்கள் அல்லது உள்ளூராட்சி ஆணையாளரின் நிறுவனங்களில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து கோரப்படுகின்றன மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்களை 19-11-92 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை இப்பணிமனையில் ரூபா 50ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 20-11-92 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றே திறக்கப்படும். கேள்விதாரர்

## மரநடுகையை தொடரவும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட மரநடுகை வாரம் வெற்றிகரமாக அமைந்திருந்தது என்றும், இவ்வாரத்தில் பரவலாக மரக்கன்றுகள் நாட்டப்பட்டதுடன் பாதுகாப்புக்கூடுகள் அமைக்கப்பட்டிருந்தது எனவும் கழகத்தின் செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

அக்குறிப்பில் மேலும், மரக்கன்றுகளை நாட்டுவதற்குரிய உகந்த இக்காலப்பகுதியில் மரநடுகையை தொடர்வதன் மூலம், மண்ணின் வளத்தை பாதுகாக்கவும், சூழல் மாசுபடுவதைத் தடுக்கவும் முன்வருமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## பதவி வெற்றிடம்

கீழே குறிக்கப்பட்ட பதவிக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-11-27 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதவி–

கவனிப்பாளர் (சுகாதார சேவைகள்). இடம் நிரப்பு நியமனம். Attendant (Health Services. Stop] GAP. APPOINTMENT.

சம்பளம்:-

ரூபா 71/- நாளொன்றுக்கு

தகைமைகள்:-

1. எட்டாம் வகுப்பு சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

2. வைத்தியசாலையொன்றில் அல்லது சுகாதார நிலையமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.

வயது–

40 வயதிற்கு மேற்பட்டவ

## சாளரம் வெளிவந்துள்ளது

நவம்பர் - டிசெம்பர் மாதத்திற்குரிய சாளரம் இதழ் வெளிவந்துள்ளது

இவ்விதழில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முறை, மாவீரர் நினைவு மாபுகள், கப்பலோட்டிய தமிழனுடன் ஒரு சந்திப்பு, தமிழீழத்தில் கல்வி வளர்ச்சிக் கழகங்கள் இன்னும் தமிழீழம் சம்பந்தமான கட்டுரைகள், சிறுகதை, மருத்துவ கட்டுரை முதலிய பல்வேறு அம்சங்களுடன் இவ் இளையோர் இதழ் வெளிவந்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## பதவி வெற்றிடம்

கீழே குறித்தபதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்துமாத்திரம் 1992 12.04 திகதிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதவி:
கருவிப்பொறிவலர்
தரம் 11

சம்பளத்திட்டம்:
ரூபா 1865-11x40-2305 மாதமொன்றுக்கு [இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் செலுத்தப்படும்]

தகைமைகள்:
1. குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

2. ''அமுக்கம் பதி கருவி'' போன்ற துல்லிய மானிகளைப் பராமரிப்பதிலும், திருத்துவதிலும் அரசாங்கத்திணைக்களமொன்றிலோ அரச கூட்டுத்தாபனமொன்றிலோ, அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனமொன்றிலோ, குறைந்த பட்சம் ஐந்தாண்டு அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்

தெரிவு:

## தீப்பெட்டி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் குடும்ப அட்டைக்கு ஒரு தீப்பெட்டி ஒரு ரூபாய் வீதம் விநியோகிக்க யாழ் செயலக புனர்வாழ்வுப்பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது

இன்றுமுதல் சகல பல நோ. கூ. சங்கங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

## பெறுபேறுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட 90, 91 ஆம் ஆண்டு முதலாம் வருட மாணவர்களின் பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளியாகின

இப் பெறுபேறுகளில் சுமார் 67 மாணவர்கள் பொருளியல் சிறப்புக் கலைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என தெரியவருகின்றது,

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஈழத்தாய் மடியில் 10 — 02 — 1969



ஈழ மண்ணின் மடியில் 07 — 11 — 1985

### வீரவேங்கை சத்தியன்

(பரமசாமி கிருபாகரன்)

சால்பிடிக்கும் கூட்டமல்ல - இது
வேல் பிடிக்கும் கூட்டமென
உள்ளத்தே உறுதி பூண்டு
தோள்களிலே துவக்கேந்தி
அன்னையவள் அன்பை மறந்து - தமிழ்
அன்னை மண்ணின் அன்பை தொடர்ந்து
கள்ளமில்லா தலைவனவன்அடியொற்றி
களங்கள் பல கண்டு காவியம் ஆகிய
எம் இனிய சத்தியனே - எம்
மண் உள்ளவரை உன் நினைவுகள்
தொடருமடா...

குமரபுரம்
பரந்தன்

ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்
- குடும்பத்தினர்

(3541)

## நினைவு கூருகின்றோம் ...

### 1992-11-07

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் உமையாள்புரம் பகுதியில் சிறிலங்காப்படையினர் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சத்தியன்** (பரமசாமி கிருபாகரன் - இல- 61, குமரபுரம், பரந்தன் - கிளிநொச்சி)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய-

**நிசாந்தன்** (ராசேந்திரன் - பரந்தன் - கிளிநொச்சி)

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் தவறுதலாகச்

சாலை, யாழ்ப்பாணம்.

(சி-5356)

### நேரம் பெறுமதியானது

சீருடையோ வேறுடையோ துரித சலவைக்கு மில்க்வைற் சலவைத்தூள். அழுக்கை அகற்றவும், அதிக வெண்மைக்கும் மில்க்வைற் சலவைத் தூள் 50 கிறாம். பக்கற் ரூபா 6/- மட்டுமே. எல்லாக் கடைகளிலும் கிடைக்கிறது. 100 மேலுறைகளைக் கொடுத்து அழகிய கைலேஞ்சியை அன்பளிப்பாகப் பெறுங்கள். —மில்க்வைற்

(சி-5361)

---

கொள்ளப்பட்டு அன்றே திறக்கப்படும். கேள்விதாரர் விரும்பினால் அச்சமயம் சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் வைக்கப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மலசலகூடம் அமைப்பதற்கான கேள்விப் பத்திரம்'' என எழுதப்பட்டு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ இவ்வலுவலகத்தில் உள்ள பெட்டியிலோ சேர்க்சப்படலாம்.

சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை
இல 59, விக்டோரியாவீதி.
யாழ்ப்பாணம்.
05 - 11 - 92

வைத்தியகலாநிதி
பொ இரத்தினசபாபதி
பிராந்தியபணிப்பாளர்

(சி-5365)

---

# பயன் மிக்க பழமரக் கன்றுகள் விற்பனைக்கு

''உங்கள்
வளவுகளில்
மரம் நடும்போது
நல் வர்க்க
பழ மரங்களை
தெரிவு செய்து
நடுங்கள்
பலபயன்
பெறுவீர்''

நல்ல இனமாய் மரங்களில் இருந்து தெரிவு செய்து ஒட்டிய பழமரக்கன்றுகளான

- ★ மா
- ★ பலா
- ★ தோடை
- ★ எலுமிச்சை
- ★ மாதுளை
- ★ கொய்யா
- ★ அகத்தி
- ★ பப்பாசி போன்றவை

8/- தொடக்கம் 150/- வரை பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.
மொத்தமாக, சில்லறையாக பெற்றுக்கொள்ள

**மேஜர் பிரதாப் செட்டி**
**மாதிரிப் பண்ணை**
இராஜவீதி - கோப்பாய்

(சி-5370

---

வயது -

40 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் ஆகாது

தெரிவு -

பொது உளச்சார்பறிப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

குறிப்பு -

ஒரு வருடத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெற விரும்புவோரது கோரிக்கையும் பரிசீலனை செய்யப்படும். ஒப்பந்த அடிப்படையிலான நியமனமாயின்வயதெல்லை கவனிககப்படமாட்டாது ஒப்பந்த அடிப்படையிலாயின் மாதாந்தம் ரூபா 2985/- (நிலையானது) வழங்கப்படும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்கள் மட்டும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் படிவங்களை பெற விரும்புவோர் சுயமுகவரியிடப்பட்டதும் முத்திரையொட்டப்பட்டதுமான 23X10 ச.மீ அளவுடைய கடித உறைகளை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் தெளிவில்லாத விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
1992. 11. 02

(சி-5367)

---

தெரிவு:

தொழிற்தேர்வின் மூலமும் நேர்முகப்பரீட்சை மூலமும்

குறிப்பு:

தொழில் நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து பெறப்பட்ட தொழில் சான்றிதழை வைத்திருப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

வயது:

40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

அரசாங்கத்திணைக்களங்கள், அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை நேரிலோ அல்லது சுய முகவரியிடப்பட்ட முத்திரை ஒட்டிய 23x10 செ.மீ அளவுடைய உறைகளை அனுப்பி தபால் மூலமாகவோ பெற விரும்புவோர், இப்பல்கலைக்கழகத்திலுள்ள சிரேஷ்ட உதவிப்பதிவாளர் தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவாக விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992.10.30

[சி-5368]

---

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் தவறுதலாகக் கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த-

**அசிஸ்** (பரமலிங்கம் தவநேசன் - முத்தையன்கட்டு - முல்லைத்தீவு)

மட்டக்களப்பு- திருப்பழுகாமம் பகுதியில் சிறிலங் காப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**நெல்சன்** (சின்னத்துரை உதயகுமார் - சேனைக்குடியிருப்பு, கல்முனை )

1987ஆம் ஆண்டு உரும்பராய்ப் பகுதியில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 7 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு திருக்கோணமலை/ மூதூர் 55-ம் கட்டைப் பகுதியில் இந்தியப் படையினரின் முன்னிலையில் தேசவிரோதிகளினால் வெட்டிக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**ரகு**

1989-ம் ஆண்டு விள்பத்துக்காட்டுப் பகுதியில் சிறிலங் காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**ஆழ்வார்** (நா. கனகசுந்தரம்)

**கப்டன் சத்தியராஜ்** (பா. கிறிஸ்ரி உயிலங்குளம்- மன்னார்)

1990-ம் ஆண்டு மாவிட்டபுரம் பகுதியில், சிறிலங் காப்படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**மது** (வடிவேல் ஆனந்தசிவம் - வேம்பிராய்ச் சந்தி மீசாலை வடக்கு, சாவகச்சேரி)

தமிழீழக்கடற்பரப்பில் [குறிகாட்டுவான்] தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்க்கடற்றொழிலாளர்கள்.

1991-ம் ஆண்டு திருமலை - செட்டியா வெளியில், சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5366)

சிந்தனைக்கு

சாதாரண அமெரிக்கன்சரியானவன் தான்; இலட்சியவாதி அமெரிக்கன் தான் ஒரே குழப்பப் பேர்வழி

ஜி கே. செஸ்ட்டர்ட்டன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 07-11-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

# இளைய தலைமையிடம் அமெரிக்க அதிகாரம்

அமெரிக்காவில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட பில் கிளிங்டன் அமோக வெற்றியீட்டியுள்ளார். இவ் வெற்றியின் மூலம் கடந்த பன்னிரண்டு வருட காலமாக ஆட்சியில் இருந்த குடியரசுக் கட்சியினர் வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேற வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் அடுத்த தேர்தலில் அதிபர் ஜோர்ஜ்புஷ்ஷை எவரும் வெல்ல முடியாது என கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்தன. அத்தோடு, ஜோர்ஜ் புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிட ஜனநாயகக் கட்சியில் பிரபலமான தலைவர் ஒருவர் இல்லை என்றும் பிரஸ்தாபிக்கவும் பட்டது ஆனால், திரு. பில் கிளிங்டன் ஒரு வருடத்திற்கு மேலாகச் செய்த கடினமான தேர்தல் பிரசாரத்தின் மூலம் பெரு வெற்றியீட்டியுள்ளார்

ஆனால், இத்தேர்தல் முதிய தலைமுறையினருக்கும் - இளைய தலைமுறையினருக்கும், பழைமைவாதிகளுக்கும் - புதுமை விரும்பிகளுக்கும் இடையில் ஏற்பட்ட போட்டியாகவே கணிக்கப்பட்டது. இந் நிலையில், தேர்தலின்மூலம் பழைமைவாதிகளை அமெரிக்க மக்கள் வெளியேற்றியுள்ளனர் என்றே கொள்ள வேண்டும்.

குடியரசுக் கட்சியினர் ஆட்சியிலிருந்த கடந்த பன்னிரண்டு வருட காலத்தில், உலக வரலாற்றில் பெரும் மாறுதல்கள் இடம் பெற்றன. சுமார் 45 வருடங்களுக்கு மேலாக நீடித்த கெடுபிடிப் போர் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டதோடு, உலகின் தனி ஒரு வல்லரசாக அமெரிக்கா மாறியிருந்தது. இதேவேளை, புதிய உலக ஒழுங்கொன்றை அமைப்பதில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அத்தோடு, இவ் ஒழுங்கின் பரீட்சார்த்தமாக வளைகுடாவில் பெரும் போர் ஒன்றையும் ஈராக்கிற்கு எதிராக நடத்தியும் இருந்தார்.

இவ்வாறாக, அமெரிக்க உலக தலைமைத்துவத்தை கேள்வி இன்றி தன் கையில் வைத்துக்

# ஜனாதிபதி பதவியில் சிறு வயது முதல் குறியாக இருந்த பில். கிளிங்டன்

"பெரும் நம்பிக்கையுடன்வீரம் மிக்கமனத்தினராய் பெருமளவு எண்ணிக்கைப் பெரும்பான்மையுடன் கூடிய வெற்றியைத் தந்துள்ளீர்கள். இது ஒரு புதிய ஆரம்பம்."

அமெரிக்க அதிபர் தேர்தலில் தமது வெற்றி உறுதிப் படுத்தப்பட்ட பின்பு நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றிய திரு. பில். கிளிங்டன் இவ்வாறு குறிப்பிட்டார்.

தனது இளமைக்காலம் முதலே அமெரிக்க அதிபர் பதவியைப் பெறவேண்டுமெனக் காத்திருந்தவர் எனச் சொல்லப்படும் நாற்பத்தியாறு வயதான திரு. பில். கிளிங்டன் அமெரிக்காவின் ஆர்கன்லாஸ் மாநிலத்தின் சிறிய ஹோப் நகரில் பிறந்தவராவர்.

1976-ம் ஆண்டில் ஆர்கன்லாஸ் மாநிலத்தில் அட்டோர்னி ஜெனரல் பதவியை வென்றதன் மூலம் தனது முதலாவது தேர்தல் வெற்றியைப் பெற்றுக் கொண்ட இவர் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக ஆர்கன்லாஸ் மாநிலக் கவர்னராகக் கடமையாற்றி வந்தார். ஆர்கன்வரின் மாநில கவர்னராக முப்பத்திரண்டு வயதுடைய பில் கிளிங்டன் தெரிவு செய்யப்பட்டபோது அமெரிக்கா முழுவதிலும் வயதில் குறைந்த கவர்னராக இருந்தார். வறுமையில் வளர்ந்தவரான இவர் நாட்டின் பொருளாதாரத்தில் மாற்றம் செய்யும் திட்டத்தை தேர்தல் பிரசார இயக்கத்தின்போது பெருமளவில் வலியுறுத்தி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது ஜனாதிபதி லின்டன் ஜோன்சன் காலத்திற்குப் பின்னர் ஜனநாயகக்கட்சியால் வெல்லப்பட முடியாதிருந்த நியூ ஜேர்ஸி, நியூ ஹாம்வுயர், மெயின் வெர் மோண்ட் உட்பட பல தென் மாநிலங்களில் கிளிங்டன் வெற்றி பெற்றிருப்பது அவரது வெற்றியில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் ஆகும்.

வியட்நாமில் அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட்டதை அக்காலத்திலேயே கண்டித்து வந்தவரான பில். கிளிங்டன், போரில் நேரடியாக பங்கு கொள்ள வேண்டிய அவசியம் வந்த போது அதைத் தவிர்த்து விட்டவர் ஆவார். இவரது இச்செய்கை தேசப்பற்றில்லாத ஒரு செயல் என்று தேர்தல் பிரசார இயக்கத்தின் போது வர்ணிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. கறுப்பின மக்கள், பெண்கள், இளைஞர்கள் ஆகியோரது வாக்குகளையும் தன் பக்கம் கவர்ந்து இழுத்த பில் கிளிங்டன் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர்பிறந்து அமெரிக்காவின் ஜனாதிபதி பதவியைப் பெறும் முதலாமவர் ஆகிறார். கருவிலிருக்கும் போதே தந்தையை இழந்தவரான பில். கிளிங்டன் வறுமையின் பிடியில் சிக்கி தமது சொந்த முயற்சியால் உயர்ந்தவர் என்பது கவனிக்கத்தக்கது. 1975 இல் வழக்கறிஞரான ஹில்லறி நோத்தம் என்பவரைத் திருமணம் செய்து கொண்ட பில். கிளிங்டன் செல்னியா என்னும் 12 வயதுக் குழந்தையின் தந்தையுமாவார்.

பில். கிளிங்டன் மனைவியான திருமதி ஹில்லறி அவரது கணவருக்குப் புறம்பாக தனியான சொந்த வாழ்க்கையையும், சொந்த இலட்சியங்களையும் கொண்டுள்ளவராவார். திருமதி ஹில்லறி சிறுவர்களது உரிமைகள் தொடர்பான சட்டத்தரணி என்பதுடன், பல்வேறு கூட்டுறவுச் சபைகளிலும், மக்கள் நலன் பேணும் சபைகளிலும் நிர்வாக உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். குழந்தைகளின் இறப்பு வீதம் குறைக்கப்பட வேண்டுமென்பதிலும், ஏழைகளுக்கு சட்டரீதியான உதவிகள் வழங்கப்பட வேண்டுமென்பதிலும் இவர் தீவிரமான நாட்டம் கொண்டவர். கிளிங்டன் தம்பதிகள் வெவ்வேறு தேவாலயங்களுக்கே வழிபாட்டுக்குச் செல்கின்றவர்கள் என்பதும் தனித்தனியாகவேவங்கிக் கணக்கை கொண்டுள்ளனர் என்பதும்மேலும் குறிப்பிடக்கூடியதாகும். சிக்காக்கோவின் புறநகர்ப் பகுதியான பார்ச்றிட்சிப் செல்வந்த தொழில் அதிபருக்கு மகளாகப் பிறந்த ஹில்லறி யால சட்டக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது கிளிங்டனைச் சந்தித்து, காதலித்து திருமணம் செய்து கொண்டார். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில்போட்டியிட பில்.கிளிங்டன் முன்வந்தபோது, அவரது மனைவியுடன் ஒப்பிட்டு அவரை ஒரு "வெறுமையான மனிதன்" என்று ஆர்கன்லாஸ் மாநிலத்தில் வெளியாகும் "டிமோகிரட் கசெட்" பத்திரிகை வர்ணித்திருந்தது. ஆனால் இன்று தேர்தல்மூலம் உலகின் முதல் வல்லரசு என்று வர்ணிக்கப்படும் அமெரிக்காவின் நாற்பத்திரண்டாவது ஜனாதிபதியாக பில். கிளிங்டன் அறிவிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் ஜனவரி 20-ம்திகதி பில். கிளிங்டன் பதவி ஏற்கிறார். புதிய திருப்பங்கள் ஏற்படுமென்ற நம்பிக்கையோடு உலகம் காத்திருக்கிறது.

# ஜெயலலிதாவுடன்மேடையில்தோன்ற நரசிம்மராவ் தயக்கம்

(சென்னை)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் சென்னை விஜயம் ரத்துச்செய்யப்பட்டதன் பின்னணி பற்றி பல்வேறு கருத்துக்கள் சென்னை அரசியல் வட்டாங்களில் பரப்பப்பட்டு வருகின்றது.

ஜனதா கட்சித் தலைவரும், ஜெயலலிதா அரசுக்கு தலைவலியை ஏற்படுத்தி வருபவருமான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியின் செயல்கள் தற்போது மத்திய அரசினால் அக்கறையுடன் கவனிக்கப்படுவதாகவும், அதனால் ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கும் ஜெயலலிதாவோடு ஒரே மேடையில் தோன்ற நரசிம்மராவ் தயக்கம் தெரிவிப்பதாகவும் கூறப்படுகிறது.

சென்னையிலிருந்து வெளிவரும் தினத்தந்தி நாளிதழின் பொன்விழாக் கூட்டத்திலும், ராஜீவ் காந்தி சிலை திறப்பு விழாவிலும், கலந்து கொள்வதற்காக சென்னைக்கு நான்காம் திகதியன்று வருவதற்கு நரசிம்மராவ் திட்டமிட்டிருந்தார் எனவும், இவ் விஜயத்தின் போது முதல்வர் ஜெயலலிதா "மதிய உணவு" விருந்தொன்றை அவருக்கு வழங்குவார் எனவும் கூறப்பட்டிருந்தது.

எனினும் இந்தியப் பிரதமரின் இந்த விஜயம் இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே. இந்த விஜயம் ஒத்தி வைக்கப்பட்டமைக்கு தமிழக காங்கிரஸ் வட்டாரங்களில் நிலவும் கோஷ்டிப் பூசல்களும் ஒரு காரணம் என்று மேலும் தெரியவருகின்றது.

## காங்கிரஸ் - அ. இ. அ. தி. மு. க கூட்டணி உடையலாம்

அ தி. மு.க-காங்கிரஸ் கூட்டணி உடையும் அபாயத்தில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவினை பதவியிலிருந்து விலக்க முயலும் சுப்பிரமணிய சுவாமியின் இயக்கம் காரணமாக ஆளும் காங்கிரஸ் கட்சி அ. தி. மு க. கூட்டணி உடையும் அபாயத்தில் இருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## ஹொங்ஹொங்கில் பிரிட்டன்

# யாழ். நவீன சந்தையில் கரப்பொத்தான் கொட்டம்

(குருநகர்)

கரப்பொத்தான் பூச்சிகளின் பெருக்கத்தால் பெருந்தொகையான பெறுமதி மிக்க பொருள்கள் நாசமாவதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதுவேறெங்கேயும்இல்லை. யாழ் நகரின் மையப் பகுதியிலேயே நடைபெறுகிறது

யாழ் நவீன சந்தை இரண்டாம் தள மலசல கூடத்தில் பெருகி இருக்கும் கரப்பொத்தான் பூச்சிகள் இரவில்அங்கே இருக்கும் புடைவைக் கடைகள் மற்றும் சிற்றுண்டி, பல சரக்குக் கடைகளில் நுழைந்து பொருள்களை நாசம் செய்கின்றனவென்று கடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்

யாழ் மாநகரசபை சுகாதாரப் பகுதியினர் மலசல கூடத்தை துப்பரவு செய்கையில் கரப்பொத்தான் பூச்சிகளைக் கொல்வதற்கான வழிமுறைகளைக் கடைப்பிடிக்காமையால் மலசல கூடத்தில் பெருமளவில் பூச்சிகள் பெருகி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

புடைவைகள் மற்றும் உணவுப் பொருள்கள் கரப்பொத்தான் பூச்சிகளினால் நாசமடைவதையும் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர்

இதனால் பெரும் சுகாதார சீர்கேடுகள் உண்டாகக்கூடும் எனவும் அஞ்சப்படுகின்றது.

(21)

# உரிமைக்கு குரலெழுப்பினால் புலிகள் எனக் குற்றச்சாட்டு

(தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமைகள் தொடர்பாகக் குரல் எழுப்பும்போது

வி. சென்னன் சம்பந்தப்பட்ட தோட்டக் கம்பனிகளுக்கு அவசர [illegible]

நடத்தியும் இருந்தார்.

இவ்வாறாக, அமெரிக்க உலக தலைமைத்துவத்தை கேள்வி இன்றி தன் கையில் வைத்துக் கொண்டுள்ளவேளையில்தான் அதற்கு வழிசமைத்த அதிபர்ஜோர்ஜ்புஷ்ஷும் தேர்தலில் தோற்கடிக்கப் பட்டுள்ளார். அதிபர்புஷ்ஷின் இத் தோல்வியானது இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்த பிரதமர் வில்சன் சேர்ச்சிலை அடுத்த தேர்தலில் பிரிட்டன் மக்கள் தோற்கடித்ததை ஓரளவில் ஒத்துள்ளது என்றே கூறலாம்.

இவ்வாறு கூறுவதில் தவறு இருப்பதாகவும் இல்லை. ஏனெனில் ஜோர்ஜ் புஷ்ஷிற்கு எதிராக பில். கிளிங்டன் வைத்த பிரதான குற்றச் சாட்டுக்களில் பொருளாதார வீழ்ச்சி / வேலைவாய்ப்பின்மை என்பனவே முக்கிய இடம் பிடித்தன. இதை வலியுறுத்துமாப் போல் தேர்தலில் பில். கிளிங்டன் வெற்றி பெறுவாரேயானால், அது ஜோர்ஜ் புஷ்ஷின் உள் நாட்டுக் கொள்கைக்கு கிடைத்த தோல்வி என்றே கருதலாம் என ஆரம்பம் முதலே அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுவந்தனர்.

மேலும், பில் கிளிங்டன் போரில் ஆர்வமில்லாதவராகவே கடந்த காலத்தில் தன்னை காட்டிக் கொண்டுள்ளார். அதிபர் ஜோர்ஜ்புஷ் பில்கிளிங்டன் மீது சுமத்திய பிரதான குற்றச்சாட்டு வியட்னாம் போரில் பங்கேற்காத தேச விசுவாசமற்றவர் என்பதாகும். ஆனால், இக் குற்றச் சாட்டு இன்று அமெரிக்க மக்களால் நிராகரிக்கப் பட்டுள்ளதாகத் தெரிகின்றது. ஆகையினால் உலகில் தற்பொழுது அமெரிக்கா போரில் ஈடுபடும் தேவை அமெரிக்காவிற்கு இல்லை என அமெரிக்க மக்கள் கருதுவதுபோல்தெரிகிறது அதாவது கெடுபிடிப் போர் முடிந்து விட்டது- அது பழைய தலை முறையினரின் நினைவாகவே இருக்கட்டும் உலகில் ஏனைய பகுதிகளில் கெடுபிடிப் போருக்கு தலைமை தாங்கியவர்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளது போல் அமெரிக்கா கெடுபிடிப் போரில் பங்கு கொண்டதோடு, அவற்றிற்கு தலைமை தாங்கியவர்கள் ஓய்வெடுக்கும் காலம் வந்துவிட்டது என அமெரிக்க மக்கள் எண்ணுகின்றனரா?

எது எவ்வாறாயினும் அமெரிக்காவில் இத்தேர்தலில் பழைய தலைமுறையினர் இளைய தலைமுறையிடம் தோற்றுப் போய் விட்டனர் அத்தேடு உலகத்தலைமைத்துவம்என்பதைவிட உள்வீட்டுப் பிரச்சினை முதன்மையானதாக மாறியும்.விட்டது

மணிய சுவாமியின் இயக்கம் ...

# ஹொங்ஹொங்கில் பிரிட்டன் ராணுவ பயிற்சி வாபஸ்

(லண்டன்)

ஹொங் ஹொங்கில் அடுத்த வாரம் நடாத்தவிருந்த இராணுவப் பயிற்சியைப் பிரித்தானிய இராணுவம் வாபஸ் பெற்றுவிட்டது

ஹொங் ஹொங்கின் அரசியல் எதிர்காலம் குறித்து பிரித்தானியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் ஏற்பட்ட விரிசல் காரணமாக இந்த முடிவு பிரித்தானிய அரசினால் எடுக்கப்பட்டது.

சீனாவிலிருந்து ஹொங் ஹொங் மீது படையெடுப்பு நடைபெறுவது போலவும், அதனை எதிர்த்துப் போரிடுவது போலவும் பாவனை செய்து இந்த இராணுவப் பயிற்சி நடைபெறவிருந்தது சீனாவுக்கு உவப்பாக இருக்கவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது

இந்தப் பயிற்சியை ஒத்தி வைக்குமாறு ஹொங்ஹொங் ஆளுநர் கிறிஸ் பற்றார் கேட்டிருந்தார்.

காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு

# பேச்சுவார்த்தைக்கு வர தீவிரவாதிகளுக்கு அழைப்பு

காஷ்மீரின் வருங்காலம் பற்றிய பேச்சுக்கள் நடத்துவதற்காக சுதந்திரப் போராட்டத்தை ஆதரிக்கும் தலைவர்களுக்கு இநதியஅரசு அழைப்பு விடுத்துவளது என்று யு என். ஐ. செய்தியொன்று செவ்வாயன்று தெரிவித்தது.

அச்செய்தியில் மேலும் காஷ்மீரில் சுதந்திரப் போராட்டத்தை ஆதரித்தமைக்காக தற்பொழுது சிறை வைக்கப்பட்டிருக்கும், இரு தலைவர்கள் உட்பட ஐந்து தலைவர்களுக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும், இன்று புதுடில்லியில் பேச்சுக்கள் நடக்குமென்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறபபட்டுள்ளது. இனம் காண முடியாத அரசாங்க அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி இச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது தகுந்த முறையில் ஊர்ஜிதம் செய்யப் பட முடியவில்லை என்று மேலும் கூறப்பட்டுள்ளது.

# ஜெயலலிதா மீது விசாரணை; சுவாமி மகஜர்

(டில்லி)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அதிகாரத் துஷ்பிரயோகம் செய்திருப்பதாகவும், அரசியல் சட்டப் பண்பை மீறியிருப்பதாகவும் கூறி, அவர் மீது விசாரணை நடத்த உச்சநீதிபதி தலைமையில் வ்சாரணைக் குழு ஒன்றை அமைக்கக் கோரும் மகஜர் ஒன்றை ஜனதாக் கட்சி தலைவர் சுப்பிரமணியம் சுவாமி குடியரசுத் தலைவரிடம் கையளித்தார்.

செல்வி ஜெயலலிதாவைப் பதவி விலகக்கோரி கொடுத்த மகஜரைத் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்க மாநில ஆளுநரை குடியரசுத் தலைவர் பணிக்க வேண்டும் என்றும் அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

றது.

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாமனிதர் கலைஞானி அவர்கள் சேகரித்து வைத்த கலைப்பொக்கிஷங்களை எப்படிப் பாதுகாத்து வைக்க வேண்டுமென்று ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று (7. 11. 92) கம்பன் கோட்ட மண்டபத்தில் பிற்பகல் மூன்று மணியளவில் நடைபெறவுள்ளது

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் ஆலோசனைகளை வழங்குமாறு அகில இலங்கைக் கம்பன் கழக செயலாளர் க. குமாரதாசன் அழைப்பு விடுத்துள்ளார்

## உதைபந்தாட்டம்

[சாவகச்சேரி]

சாவகச்சேரி இந்து மைதானத்தில் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் 11-11-92 13-11-92 16-11-92 ஆகிய திகதிகளில் பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## ஊழியர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊழியர் தினவிழா எதிர்வரும் புதன்கிழமை(11-11-92) பிற்பகல் 1. 30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையாங்கில் நீ. இரவீந்திர தாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக துணைவேந்தர் அ. துரைராசா அவர்களும் சிறப்பு விருந்தினராக க.பரமேஸ்வரன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன

தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமைகள் தொடர்பாகக் குரல் எழுப்பும்போது அவர்களைப் புலிகள் என அடையாளப்படுத்திக் கொடுமைப்படுத்தும் சம்பவங்கள் ஊவா மாகாணத்தில் அதிகரித்து வருகின்றன. இந்நிலை தொடர்ந்து நீடிக்குமேயானால் தோட்டத் தொழிலாளர் மாற்று நடவடிக்கையை எடுக்க நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

மேற்கண்டவாறு ஊவா மாகாண எம். பியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உதவி செயலாளருமான டி. வி. சென்னன் சம்பந்தப்பட்ட தோட்டக் கம்பனிகளுக்கு அவசர கடிதமூலம் அறிவித்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதற்குத் தோட்ட நிர்வாகிகளும் காரணமாக அமைவதாகவும், தோட்ட நிர்வாகிகள் சிலரின் வேண்டுகோளின்படி பொலிசார் தோட்டங்களில் வீடு வீடாகத் தேடுதல் நடாத்தி இளைஞர்களைக் கைது செய்து அழைத்துச் சென்றுள்ளதாகவும் டி. வி. சென்னன் சுட்டிக் காட்டியுள்ளார்.

# தோட்டத்துரைகள் பதவிநீக்கம் ஊழல் மோசடியே காரணம்

ஊழல் மோசடி குற்றச் சாட்டின் பேரில் இருபது தோட்டத்துரைமார் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நோர்வூர், வனராஜா ஆகிய தோட்டங்களில் தேயிலை ஒருகிலோ 60 ருபாவிற்கே விற்பனை செய்யப்பட்டதாகவும் ஆனால் தற்போது 90 ருபாவிற்கு விற்பனையாவதாகவும் தோட்ட நிர்வாகங்களில் ஊழல் புரிந்த இருபதுக்கும் அதிகமான தோட்டத் துரைமார் பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## தூயகணித கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க. பொ. த உயர்தரவகுப்புகளிற்கு தூய கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட தொடர் கருத்தரங்கொன்று இன்றுமுதல் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற இருக்கிறது.

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற இருக்கும் இக்கருத்தரங்கு தினமும் காலை 8-30 மணிமுதல் மாலை 4-00 மணி வரை நடைபெறும்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் நடத்தப்படும் இக் கருத்தரங்கில் ஆசிரியர்களும் பங்குபற்றி பயன்பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது

## டிப்புளோமா பயிற்சி பதிவு செய்யவும்

(யாழ்ப்பாணம்)

பட்டப்பின் கல்வி டிப்புளோமா 91/92 கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் இம் மாத முடிவுக்கு முன்பாக, யாழ். பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யும்படி கேட்கப்பட்டுள்ளனர். நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவானவர்களுக்கு ஏற்கனவே கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும், இவ்வாறானோரின் பெயர்ப்பட்டியல் பல்கலைக்கழக அறிவித்தற் பலகையில் பார்வைக்கு இடப்பட்டுள்ளது என்றும் பல்கலைக்கழக வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

ஈழநாதம்

# ஜேர்மன் நாஸி ஆதரவாளர்கள் தேசிய படை அமைக்க முயற்சி

ஜேர்மனியில் இருக்கும் நாஸி ஆதரவாளர்கள் தங்கள் நடவடிக்கைகளை ஒன்றிணைக்கும் வகையில் தேசிய கமாண்டோ அமைப்பு ஒன்றை நிறுவுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருப்பதாக அதிகாரிகள் கூறியுள்ளனர். வலது சாரிகளிடையே இரகசியத் தொடர்புகள் அதிகரித்து வருவதும் தீவிர வாதிகளின்பலாத்காரம் அதிகரித்து வருவதும் இதனை உறுதிப் படுத்துவதாக ஜேர்மன் அதிகாரிகள் மேலும் கூறியுள்ளனர்.

இந்த ஆண்டில் வலதுசாரி தீவிரவாதிகள் 330 பேர்களைத் தாக்கியுள்ளனர் எனவும் சென்ற ஆண்டு முழுவதிலும் 230 பேர் மட்டுமே தாக்கப்பட்டிருந்தனர். எனவும் இவ் ஆண்டில் பதின்மூன்று பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதனிடையில் ஜேர்மன் யூதர்களிடம் அவர்களது தாயகம் ஜேர்மனியா? இஸ்ரேலா? எனக் கேள்வி எழுப்பிய கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி உறுப்பினர் சார்ல் ஹெயின்ஸ் ஸ்மித் மீது தேசிய ரீதியில் பலதித கண்டனம் எழுப்பப்பட்டதால் அவர் தமது பதவியைத் துறந்துள்ளார்

ரொஸ்டோக் நகர உள் விவகாரக்கமிட்டியின்தலைவரான இவரது ராஜினாமா பிரதமர் கெல்மட் ஹோலுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருப்பதாக சொல்லப்படுகின்றது.

## வெளியுறவுக் கொள்கைபற்றி மீள்பரிசீலனை அவசியம்

### -பி. வி. நரசிம்மராவ்

[டில்லி]

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையினை முழுவதும் மீண்டும் ஆராயப்பட வேண்டும் மாற்றம் மடைந்துவரும் உலகச் சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள புதிய சவால்களை சமாளிப்பதற்கு வெளியுறவுக் கொள்கையில் கருத்தொற்றுமை தேவை என இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நேற்று முன்தினம் புதுடில்லியில் வெளியுறவு அமைச்சகத்தின் எம் பிக்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போது இதனைத் தெரிவித்தார்.

பொதுக் கருத்துக்கள் நிலவக் கூடிய சில வெளியுறவுக் கொள்கையின் அம்சங்களை சான்று காட்டி வெளியுறவுக் கொள்கையின் மாற்றங்கள் பற்றி வலியுறுத்திப் பேசினார்.

அணுஆயுத பரவல் தடுப்பு, ஒப்பந்தப் படைக்குறைப்பு, மூன்றாம் மண்டல நாடுகளின் கடன்சுமை, ஐ. நாவினை ஜனநாயகத் தன்மைவாய்ந்த ஒரு அமைப்பாக ஆக்குவது பற்றியும் தனது உரையில் இந்தியப் பிரதமர் குறிப்பிட்டார்.

## பொன்விழா நிகழ்வுகள்

கொக்குவில் இளைஞர் சங்கம் மனோன்மணி சனசமூக நிலையப் பொன்விழா இன்று இடம் பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு காலை மரதன் ஓட்டப் போட்டியும் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் மாலை கரப்பந்தாட்ட இறுதிப்போட்டியும் அதனைத்தொடர்ந்து மங்கள இசையுடன் விழா ஆரம்பமாகி பொது அறிவுப் போட்டியும் பொன்விழா மலர் வெளியீடும் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். இந் நிகழ்ச்சியில் விடுதலைப்புலிகளின் நல்லூர் பிரதேசப் பொறுப்பாளர் தேசியக்கொடியை ஏற்றிவைப்பார் பிரதம விருந்தினராக நல்லூர் விஷேட ஆணையாளர் திரு. ஆ.மகாலிங்கம் கலந்துகொள்வார்.

## போக்குவரத்து இடைஞ்சல்

யாழ். நகரின் இடிபாடுகளால்எஞ்சியகற்கள், சீமென்ற் தூண்கள் என்பவற்றை ஏற்றி வந்து மவுண்கார்மேல் வீதியில் கொட்டுவதால் வீதியில் போக்குவரவு செய்ய முடியாத நிலை உருவாகி வருகிறது

வேறெங்கோ இருந்து வண்டிகளில் ஏற்றி வரப்படும். மேற்படி பொருள்கள் வீதியை நிறைத்துக் குவிக்கப்படுவது, அவ்வீதியைப் பயன்படுத்தும் பாதசாரிகள், மற்றும் வாகனங்கள் செல்வதற்குப் பெரும் இடைஞ்சலாக இருந்து வருவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (21

## பருவமழை தொடர்கிறது அகதிகள் அவலம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பருவமழை பெய்யத் தொடங்கியதை அடுத்து அகதிமுகாம்களில் தங்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் பெரும் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். மானிப்பாய்ப் பகுதிகளில் பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தங்கியுள்ள மக்களே இதனால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் 30,000 குடும்பங்கள் அகதிகளாக தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் பெரும்பாலானவர்கள் பாடசாலை மைதானங்களிலும் ஆலய மூன்றலிலும், மரங்களின் கீழும் தங்கி வருகின்றனர். இவர்கள் தற்போது பெய்து வரும் மழையினால் தங்குமிடமின்றி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர், இவர்களை வேறு இடங்களில் தங்க வைப்பதற்கான முயற்சியில் முகாம் பொறுப்பாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

## இனவேறுபாடற்ற அமைப்பில் இணைந்துகொள்ள இணக்கம்

### - ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தெரிவிப்பு

[ஜோகான்ஸ் பேர்க்]

தென்னாபிரிக்க நாட்டில் இனவேறுபாடு இல்லாத புதிய ஜனநாயக அமைப்பில் பிராந்திய அரசுக்கள் அமைவதனை ஏற்றுக் கொள்வதாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அறிவித்துள்ளது.

குறிப்பான விடயங்களில் அதிகாரங்கள் அதிகம் தரப்பட்டு 10-முதல் 16 பிராந்தியங்களைக் கொண்டதாக புதிய தென்னாபிரிக்கா அமைய வேண்டுமென நேற்று முன்தினம் ஜோகான்ஸ்பேர்க்கில்ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைமைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## 2-ம் லெப். குகனுக்கு மக்கள் அஞ்சலி

(வடமராட்சி)

வளலாய், பத்தமேனி, ஒட்டகப்புலம் பகுதியில் நடைபெற்ற நேரடிமோதலில் வீரச்சாவடைந்த 2-ம் லெப் குகன் (நீல்டன் - சிதம்பரப்பிள்ளை இந்திரகுமார், துன்னாலை வடக்கு) எனும் போராளியின் புகழுடல் நேற்று நெல்லியடி பஸ் தரிப்பு நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப் பட்டது

பெருந்திரளான மக்கள் இவருக்கு மலரிட்டு அஞ்சலிசெலுத்தினர். பின்னர் மாலை இவரது புகழுடல் நவிண்டில் மாவீரர் துயிலும் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு விதைக்கப்பட்டது. (82)

## தாண்டிக்குளம் சாவடியில் 30 தமிழர் தடுத்து வைப்பு

தாண்டிக்குளம் பாடசாலை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களின் தொகை அதிகரித்துள்ளது

வடபகுதியிலிருந்து தென் பகுதி நோக்கிச் செல்வோரில் சந்தேகத்திற்குரியவர்கள் இத் தடுப்பு முகாமில்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

தற்போது முப்பதிற்கு மேற்பட்டோர் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. [தி]

## யாழ். மக்கள் வங்கிக்கு தற்காலிக எழுதுவினைஞர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளுக்கு தற்காலிக எழுதுவினைஞர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான நேர் முகப்பரீட்சை யாழ் செயலகத்தில் நேற்று நடைபெற்றது மிக விரைவில் இவர்களுக்கான நியமனம் வழங்கப்படும்.

## யாழ்.பல்கலையில் பொதுநிர்வாக பட்டப்பின்படிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் பொது நிர்வாகத் துறையில் பட்டப் பின்படிப்பு டிப்புளோமா கற்கை நெறியை ஆரம்பிக்கவுள்ளது.

பல்கலைக் கழகம் மானியங்கள் குழுவிடம் இதற்கான அனுமதியை யாழ்.பல்கலைக் கழக நிர்வாகம் கேட்டுள்ளது

## திருகோணமலையில் ராஜகாரியர்

(திருக்கோணமலை)

கலைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண சபையின், சபைத் தலைவராக இருந்த ராம் ராஜகாரியர்திருக்கோணமலையில் மாகாணசபையின் வேலைகளைப் பொறுப்பெடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## அரச

வழங்கப்படவுள்ளது

இந்தச் சம்பள அதிகரிப்புக்கென அரசு 400 கோடி ரூபாவைச் செலவிடும்.

பாதுகாப்பு வரி, வருமான வரி மீதான மேலதிகக் கட்டண அறவீடு மேலும் ஓராண்டு நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## துண்டு விழுவ

வறட்சி போன்றவை இருந்த போதிலும் பொருளாதாரம் 1993 இல் 5 சத விகித வளர்ச்சி பெறுமென்று அவர் நம்புவதாகக் கூறினார்.

## மீட்பு நிதி

அரசாங்க அதிபர் பிரிவினருக்கான மீட்புநிதி சேகரிப்பு மாலை 1-00 மணி முதல் 2-00 மணி வரை சண்டிலிப்பாய் மகாவித்தியாலயத்திலும், சங்கானை, காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவினருக்கான மீட்புநிதி சேகரிப்பு வட்டு இந்துக் கல்லூரியில் 2-30 தொடக்கம் 3-30 வரையும் இடம் பெறவுள்ளது.

## குழண

கப்பட்டிருப்பதால் மேற்படி நிலை தோன்றியுள்ளது நாளை மறுதினமே இக்கப்பல் கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மட்டக்களப்பு

அடைந்திருப்பதாகத் தெரிகின்றது.

இதேவேளை இருநூறு ஆடை தயாரிப்பு தொழிற்சாலைகள் நாடெங்கும் அமைக்கப்படுமெனவும், அதன் மூலம் ஏற்றுமதி வருமானம்,

## மீனவர்

நிவாரணம் வழங்கப்படுவது சம்பந்தமான புதிய திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுமென உறுதி அளிக்கப்பட்ட போதும் இதுவரை நிவாரணம் கிடைக்காததினால் நூற்றுக்கணக்கான மீனவக் குடும்பங்கள் தற்போது மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளதாக அச்சங்கப் பிரதிநிதி மேலும் தெரி

## வீரச்சாவு

பருத்தித்துறை) என்னும் போராளியே இவ் வெடிவிபத்தில் வீரச்சாவு அடைந்தவராவார்.

## வீரவேங்கை இன்பன்

மட்டக்களப்பு ஆண்டான்குள காட்டுப் பகுதியில் 31-10-92 அன்று மாலை இயக்க வேலையாக சென்று கொண்டிருந்தபோது சிறிலங்காஇராணுவத்தினர் பதுங்


## 4-வது ஆண்டு நினைவு

ச.அ. செபரத்தினம்

படைப்பு: 17-07-1928

அழிப்பு: 07-11-1988



என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.

வேதனை நினைவுகளுடன்

சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு.

மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்

(3597)



## விலங்கியல்

R. N. ஈஸ்வரதாசன் B. Sc(Cey)

93A/L, 94A/L, புதிய பிரிவுகள்

ஆரம்பம்:- 08. 11. 92 ஞாயிறு



## மரண அறிவித்தல்கள்

### கா. சி. இரத்தினசபாபதி

(இலிகிதர், பருத்தித்துறை நகரசபை)

நெல்லண்டை பருத்தித்துறையைச் சேர்ந்த கா. சி இரத்தினசபாபதி (இலிகிதர், பருத்தித்துறை நகரசபை) 4-11-1992 இல் காலமான அன்னாரது இறுதிக் கிரியைகள் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நெல்லண்டை, - குடும்பத்தினர்

ஆரம்பம்:- 08. 11. 92 ஞாயிறு

★ முற்கூட்டியே அனுமதி வழங்கப்படுகிறது. நேர அட்டவணையை 'சயன்ஸ் சென்ரரில்' பெறவும்.

★ மாணவர் வசதிக்காக ஒவ்வொரு பகுதிக்கும் உரிய அச்சடித்த வினாத்தாள் முதல் வகுப்பில் வழங்கப்படும்.

★ 93A/L பரீட்சைசக்குரிய வினாக்கள் உள்ளடக்கிய Work out Zoology வெளிவந்துவிட்டது நிறுவனத்தில் பெறலாம்.

## சயன்ஸ் சென்ரர்

**எழிலகம்- முன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

(சி/5369)

---

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க

## ஊழியர் நலன்புரிச் சங்கம்

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

முடிவுகள் 30-10-92

| | இல. | ஆறுதல் பரிசுகள் | இல. |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | 5396 | 1 | 9109 |
| 2-ம் பரிசு | 7178 | 2 | 3444 |
| 3-ம் பரிசு | 0345 | 3 | 9123 |
| | | 4 | 2503 |
| | | 5 | 9007 |
| | | 6 | 4865 |
| | | 7 | 0943 |
| | | 8 | 8462 |
| | | 9 | 0879 |
| | | 10 | 1313 |

பரிசுப் பொருள்களை 15-11-92 திகதிக்கு முன்னர் சங்கக் காரியாலயத்தில் உறுதிப்படுத்தி பெற்றுக் கொள்ளவும்.

சீட்டு விற்பனையில் உதவிய நண்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க
ஊழியர்
நலன்புரிச் சங்கம்

(3596)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

---

மூலம் ஏற்றுமதி வருமானம், மற்றும் தொழில் வாய்ப்புகள் பெருகும் எனவும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறிவருவது தெரிந்ததே.

### 18,000

ஆராய்வதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவிக்கின்றன

கடல்தொழிலில் ஈடுபட்டு இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 800 பேருக்கு 3200 வலைகள் வழங்கப்பட இருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

---

கப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார், (42)

### வாரம்

பதற்கு பம்பாய் கப்பல் நிறுவனம் ஒன்றுடன் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகம் உடன்படிக்கை கைச்சாத்திட உள்ளதாகவும் மேற்படி அதிகாரி விபரித்தார்,

இதேவேளை இக்கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டால் கிளாலி பாதையை பாதுகாப்பு படையினர் தடை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

அமரர் வைத்திய கலாநிதி

## ஜே. பி. சி. பிலிப்ஸ்

ஞாபகார்த்த

## கூட்ட அறிவித்தல்

மேற்படி விடயம் சம்பந்தமான கூட்டம் நாளை 08-11-92 ஞாயிறு காலை 10 மணிக்குப் புனித பத்திரிசியார் தொழில் நுட்ப நிறுவன மண்டபத்தில் நடைபெறும்.

தயவுசெய்து இதுவிடயத்தில் அக்கறையுடையவர்கள், நண்பர்கள், கூட நின்று பணியாற்றியவர்கள், விளையாட்டுக்கழகங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் நிறுவனங்களைச் சார்ந்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தற்காலிக குழு சார்பாக

அருட்திரு. அ. இ. பேனாட்
(அதிபர், பத்திரிசியார் கல்லூரி)

திரு. சி. தார்சீசியஸ்
(அதிபர், மரியாள் வித்தியாலயம்)

திரு. ச. கணநாதன்
(தலைவர், யாழ். உதைபந்தாட்ட லீக்)

விளம்பர உபயம்;

**விஜிதா தேநீர்ச்சாலை,**
**144, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-5373)

---

லங்காஇராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரவேங்கை இன்பன் (ஜான் நடராசா சந்திரராசா, வாகரை மட்டக்களப்பு) என்னும் போராளி வீரச்சாவு அடைந்தார்

இவ் இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.

### நகை

மக்கள் வங்கி அழைத்திருந்தது.

வாடிக்கையாளருக்கு வெவ்வேறு நேரங்கள் கொடுக்கப்பட்டிருந்த போதும் வங்கியின் முன்பாக சகலரும் ஒரே நேரத்தில் குழுமியதையடுத்து பாதுகாப்பிற்காக பொலிஸ்காரர் வரவழைக்கப்பட்டனர். எனவும் பொலிசார் இரும்புக்கம்பிகளால் அடித்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது இத்தாக்குதலால்அறுபத்ஐந்து வயதுடைய இருதய நோயாளி உட்பட பல முதியவர்கள் காயமடைந்து உள்ளனர்.

### 90 தமிழ்

பாராளு மன்றத்தில் சமர்ப்பித்து இக்கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது மட்டக்களப்பில் உள்ள கண்ணகிபுரம் கிழக்கு, பாலைச்சோலை, காக்காச்சி வெட்டை ஆகிய பகுதிகளில் கடந்த 19 20 ஆகிய திகதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது 90 பேர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் இவர்களில் 57 பேர் மட்டும் விடுதலை செய்யப்பட்டனர் மிகுதியானவர்கள் காணாமல் போயுள்ளனர் இவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை தெரியவில்லை அல்லது இவர்கள் எங்கே வைக்கப்பட்டுள்ளனர் இவர்களை உறவினர்கள் பார்வையிட அனுமதி வழங்கப்படுமா என்பது குறித்தும் இப்பாராளு மன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பியிருக்கிறார்

---

நெல்லண்டை, - குடும்பத்தினர்
பருத்தித்துறை.

(3595)

---

திருமதி

## செல்லையா கண்மணி

திருமதி செல்லையா கண்மணி நேற்று (06-11-92) ஆம் திகதி காலமானார் இவர் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், அருந்தேவியின் (தவமணி) அன்புத் தாயாரும், பொ. சண்முகராஜாவின் (முன்னாள் வல்லை மின்தறி ஆலை பண்டகசாலைப் பொறுப்பாளர்) அன்பு மாமியாரும், சித்திராங்கன் (கனடா) சுமித்திரா ஜெயநேசன் (கனடா) சுபத்திரா (கனடா) விஜித்ரா (யாழ் இந்து மகளிர் கல்லூரி A/L மாணவி) ஸ்ரீரங்கன் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கணாவின் (கனடா) அன்புப் பூட்டியுமாவார்

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறி த்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

சம்பியன் லேன்
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

தகவல்
பொ.சண்முகராசா
(மருமகன்)

[3598]

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 06-11-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 6501

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

28-8051, 28-940, 26-9703, 24-3841, 28-4481, 41-1098 26-4376, 27-5099, 26-4691, 26-5873, 42-728, 28-9927 42-9220, 28-4381, 41 8491, 24-4465, 27-5058, 42-920 24-5567, 26-0048, 41-8467, 42-9625, 42-3329, 26-767 27-1836, 36-859, 25-6473, 25-5888, 25-8188.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்;

26-1602, 24-5092, 26-8051, 24-7225, 27-5482, 26-6361, 41-9211, 41-8617, 26-1376, 27-3946.